
# ஆத்மஜோதி



பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா



ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்

ஜோதி 22 | சாதாரண ஸ்ரீ ஐப்பசி மீ 1ம் உ [17-10-70] | சுடர் 12

# பொருளடக்கம்


| | |
|---|---|
| தெய்வமே வருக! | 353 |
| நற்செயல்கள் | 354 |
| உலகாயதம் புகாத பிரசாந்தி நிலையம் | 356 |
| பாபாவின் பொன் மொழிகள் | 359 |
| நிர் விகல்ப சமாதி | 361 |
| இயற்கையே சோதிடம் | 363 |
| புட்டபத்தியின் புண்ணியமூர்த்தி | 367 |
| அப்பர் அருளமுதம் — 12 | 379 |
| உடைந்த கால் உருப்பெற்ற அதிசயம்! | 383 |




## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள்சந்தா 100-00
வருட சந்தா 5-00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி போன்: 353

# தெய்வமே வருக!

## (திரு. இராமமூர்த்தி)

கண்கண்ட தெய்வமே வருக
கலியுகவ தாரமே வருக
வெண்ணெயுண்ட மாயனே வருக
வேதத்தின் முதலே வருக
பண்கொண்ட பாடலே வருக
பாரளந்த பரமனே வருக
வண்ணமலர் கொண்டுன் பொற்றாள்
வாழ்த்துகிறோம் வருக வருகவே!

வேண்டுமயன் மாற்கரி யவனே
வேண்டியெம்மை யாட்கொள்பவனே
காண்டீபன் போலு மெம்மைக்
கடைத்தேற்ற கீதை தன்னை
ஆண்டருளி விளக்க வந்த
அச்சுத சாய்ராமா வருக
பாண்டவர்க்குத் தூது சென்ற
பார்த்தசாரதி வருக வருகவே!

பிரசாந்தி வித்வச் சபையைப்
பிறப்பறுக்கும் மருந்தா யாக்கி
தரணிதனைக் காக்க வந்த
சத்தியசாய் பாபா வருக
சரணுற்ற சத்சங்க மக்கள்
சத்தியசாய் நிவாசஞ் சார்ந்து
வரமெலாம் பெருக வென்று
வாழ்த்துமிறைவா வருக வருகவே!

அற்புதஞ்செய் கரத்தா லெம்மை
ஆட்கொள்ள வருகின் றீரே
முற்பிறப்பின் வினையோ எங்குடி
முன்னோராற் றியநன் னோன்பே
கற்புடைய மகளிர் போன்றே
கழல்தனையாம் மறவா தேத்தி
இற்றையநாள் போன்றே என்றும்
இதயத்துள் இருக்கநீ வருகவே!

# நற்செயல்கள்

(பாபா)

பதினெண் புராணங்களின் சாரத்தையும், ஒரேவாக்கியத்தில்சொல்லிவிட முடியும் என வியாசர்பகர்ந்திருக்கிறார். மற்றவர்களுக்கு உதவி செய்வதைவிட மெச்சத்தக்க செயல் வேறொன்றுமில்லை. மற்றவர்களுக்கு நீங்கள் செய்யும் தீங்கைவிட இழிவான செயல் வேறொன்றுமில்லை. ஒருவன் தன்னுடைய மகனிடம் பத்து ரூபாய்களைக் கொடுத்து கொஞ்சம் பழங்களை வாங்கிவரும்படி அவனைக் கடைவீதிக்கு அனுப்பினான். பையன் கடைக்காரனிடம் பழத்தை வாங்கிக் கொண்டு அவைகளை வீட்டிற்குக் கொண்டு வந்தான். வரும் வழியில் ''உண்பதற்கு ஏதாவது கொஞ்சம் கொடுங்கள்'' என்று பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டு பசியுடனிருந்த பிச்சைக்காரனின் இதயமுருகும் கதறலைக் கேட்டான். அவன் பழங்கள் அனைத்தையும் அவனுடைய கரங்களிலே போட்டுவிட்டு வெறுங்கையுடன் வீட்டிற்கு வந்தான். பழங்கள் எங்கே என்று தந்தை கேட்டபொழுது ''அவைகளெல்லாம் காணப்பட முடியாத கனிகள், நான் அவைகளை உங்களுக்காகப் பாதுகாத்து வைத்திருக்கிறேன். ஒருவர் காணக்கூடிய கனியை இன்று உட்கொண்டு தீர்த்துவிட முடியும். ஆனால் நான் 'உங்களுக்காகப் பெற்ற கனிகள் என்றும் புதியனவாக நீடித்திருக்கும்'' என்று விடை அளித்தான்.

மன்னனுடைய தலையிலே இருந்த நரைமுடிகளைக் கண்டபொழுது, இராணி, மரணம் தன்னுடைய வருகையின் முதல் எச்சரிக்கையை அனுப்பியிருக்கிறது என்று அவரிடம் கூறினாள். இராணியின் கூற்று குடிமக்களுக்குத் தெரியவந்தது. அவர்கள் கானகத்திற்குச் சென்று தங்களுடைய மன்னனுக்கு நூறு ஆண்டுகள் வாழ்வு தரவேண்டுமென்று இறைவனை நோக்கிக் கடுமையாகத் தவமிருந்தனர். இதைக்

கேள்விப்பட்ட இராணி கானகத்தை நோக்கித் தன்னுடைய பிரயாணத்தை ஆரம்பித்தாள். மன்னன் அவளை நோக்கி அவளுடைய வாழ்வும் நீடிக்கப்பட வேண்டுமா? எனக்கேட்டார். ஆனால் அவள் ''இல்லை, இல்லை குடி மக்களுடைய வாழ்வும் நீடிக்கப்பட வேண்டும் என்று தவம் செய்து இறைவனின் கருணையைப் பெறுவேன். ஏனெனில் இம்மாதிரியான அன்புள்ள விசுவாசமான குடிமக்களால் உங்களுடைய வாழ்நாள் மகிழ்ச்சி அளிக்கப்படா விட்டால் நீண்டநாள் வாழ்வின் பயன் என்ன''? என்று விடை அளித்தாள். குடிமக்களிடம் அவள் கொண்டிருந்த அன்பின் அளவு அம்மாதிரியிருந்தது. இம்மாதிரியான மன்னன், இராணி ஆகியோரின் ஆட்சியில் நாடு மகிழ்ச்சியாயிருந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

---

# தேவி கீர்த்தனை.

இயற்றியவர்:
**நோா, இராசம்மா.**

இராகம்:- ஹம்சத்வனி — தாளம்:-ஆதி

**பல்லவி**

பதம் பணிந்திடுவேன் தேவி தயாபரி
பண்ணிசைத் தாயே பரிமள ரூபிணி

**அனுபல்லவி**

பல்கலையருள்வாய் பரமதயாளினி
பணிந்திடு மடியார்க்கு கனிந்திடுமரசி
(பதம்)

**சரணம்**

இன்னருள் புரிந்திடும் ஏழிசைவாணி
இன்னல்கள் தீர்த்திடும் இன்கலாவாணி
தண்ணருள் பொலிந்திட வெண் கமலமீதில்
தண்ணொளி பரப்பி நாதத்திலாழ்ந்திடும் தேவி
(பதம்)

# உலகாயதம் புகாத பிரசாந்தி நிலையம்.

- ஆசிரியர் -

அறம்புகாத இராச்சியம் இராவண இராச்சியம். மறம் புகாத இராச்சியம் இராம இராச்சியம். அதுபோல உலகாயதம் புகாத இராச்சியம் பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாஜீயின் பிரசாந்தி நிலையமாகும்.

இராமன் இருக்குமிடம் அயோத்தி ஆவதுபோல பகவான் இருக்குமிடமெல்லாம் பிரசாந்தி நிலையமாகி விடுகின்றது. புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் அறிவித்தல் பலகை ஒன்று தொங்குகின்றது. அதில் பல பாஷைகளில் செய்தி ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது.

" பிரசாந்தி நிலையத்திற்கு வருவோர் பணமோ அன்றி வேறு எவ்வித காணிக்கைப் பொருளோ கொண்டு வரக் கூடாது. பூ கொண்டு வருவதைக் கூடப் பகவான் விரும்பவில்லை."

மக்கள் உள்ளத்தில் மனச்சாந்தியைக் குலைப்பது உலகாயத எண்ணங்களாகும். காமம், கோபம், மோகம், லோபம், மதம், மார்ச்சரியம் ஆகிய அத்தனை குணங்களும் உலகாயத எண்ணங்களாலேயே வளருகின்றன. மனிதன் தன்னை ஆத்மனாகக் கருதாது மனோமயனாகவும், உடல் மயமாகவும் கருதுவது அறியாமைகளுக்குள் எல்லாம் அறியாமையாகும். சரீரத்தினின்று விடுபட்டு, மனோமயத்தினின்று விடுபட்டு ஆத்ம சொரூபத்தை உணர்வதே சாதனையின் இரகசியமாகும்.

உடல் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஒன்றே வாழ்க்கையின் முக்கிய நோக்கம் என இன்றைய மக்களில் பெரும்

பான்மையோர் கருதுகின்றார்கள். உலக மக்களுக்கிடையே காணப்படும் சிக்கல்களுக்கெல்லாம் மூலகாரணம் இந்த அறியாமையேயாகும்.

மனதுக்கு இருவகை இன்பங்கள் அமைகின்றன. ஒன்று காம இன்பம். அது சிற்றின்பமாகும். மற்றொன்று ஆத்மானந்தம். அதுவே பேரின்பமாகும். காம இன்பத்திற்கு இடம் கொடுக்கும் உள்ளம் ஆத்மானந்தத்தை அனுபவிக்க முடியாது. ஆத்மானந்தத்தில் லயித்த மனம் காம இன்பத்தில் நாட்டம் கொள்வதில்லை.

உலகிலுள்ள மானிடர் எல்லாரும் சாந்தியையே விரும்புகின்றனர். சாந்தியை விரும்பாதவர் இல்லை என்றே கூறலாம். ஆனால் அதனை அடைய முயற்சிப்பதில்லை. சிலர் அசாந்தியையே சாந்தி என்று கஷ்டம் உறுகின்றனர்.

பிரசாந்தி என்றால் மேலான சாந்தி என்பது பொருள். தம்மை நாடி வருபவர்கள் மேலான சாந்தி அடைய வேண்டும் என்பதே பகவானின் திருவுளமாகும். பிரசாந்தி நிலையத்தில் பஜனை, தியானம், ஆரத்தி, ஆசீர்வாதம் இவற்றைத்தவிர வேறு எதுவும் நடப்பதில்லை. அந்த மண்டபத்தினுள் ஆத்மீக அலை வீசுகின்றது. அதனுள் நுழையும்போதே ஒவ்வொருவரும் அசாந்தியை இழந்து விடுகின்றனர்.

அங்குப் பிரம முகூர்த்தத்திலும் சந்திக் காலங்களிலும் நடைபெறும் பஜனையும் தியானமும் மனிதனை உயர்ந்த ஒரு நிலைக்கு இழுத்துச் செல்லுகின்றன. அசாந்தியை இழந்தவன் சாந்தியைப் பெற்றே ஆக வேண்டும், பகவானின் தரிசனமும், ஆசீர்வாதமும் கிடைக்கும்போது பிரசாந்தியை அடைந்து விடுகின்றான்.

ஒவ்வொருவரும் தமது வழிபாட்டு அறையில் பகவானது படத்தை வைத்துப் பூஜித்தல் மூலம் அந்த வீட்டையே பிரசாந்தி நிலையமாகவோ, புட்டபர்த்தியாகவோ

மாற்றி விடலாம். நாம் பகவானது முன்னிலையில் வாழுகின்றோம் என்ற பாவனை எம்மை உயர்ந்த நிலைக்கு இழுத்துச் செல்லுகின்றது.

"இந்தியாவில் புராதன காலந் தொடங்கியே மனிதனது புகழ் தெய்வத்தன்மை, புனிதத்தன்மை, இவை யாவும் இதனை உணரும் விதமும் நன்கு விளக்கப்பட்டும் உபதேசிக்கப்பட்டும் வருகின்றன. இதனை உணர்ந்தவர்கள் தான் பாரதத்தின் மக்களாக இருக்கத்தக்கவர்கள். மற்றவர்கள் காகத்தின் கூட்டில் பிறந்த குயில்களே. இவர்கள் பிறந்த நாடு இந்தியா தான். ஐயமில்லை. ஆனால் அடிப்படையில் இவர்கள் அயல் நாட்டவர்களே. அடியோடு வேறு ஜாதியினரும் கூட. கடவுளிடம் நம்பிக்கை இல்லையேல் அவன் குருடன் என்று குருநானக் கூறியுள்ளார். கடவுள் நம்பிக்கையில்லாத நீங்கள் நடமாடும் பிணங்களே! அழகாகவும், நேர்த்தியாகவும், பெருமதிப்புள்ளவர்களாகவும் தாஜ்மகால் போன்று நீங்கள் திகழலாம். தாஜ்மகால் என்பது பிணம் புதைத்த இடத்தில் எழும்பிய கட்டிடம் தான் என்பதை மறந்து விடாதீர்கள். பூஜை செய்யும் விதம் எதுவாயினும் கடவுளின் பேரும், உருவமும் எதுவாயினும் அதனுள் நம்பிக்கை தான் முக்கியம். அதுவே உயிர்நாடி. உயரிய பொருளைப் பெற அதுவே ஆக்கமளிக்கவல்லது." இதுவே பகவானது உபதேசமாகும்.

பிரசாந்தி என்னும்போதே குளிர்ந்த இனிமையையும், ஏகாந்த நிலையையும் அந்தப் பெயர் உள்ளத்தில் எழுப்புகிறது. நிலயத்தைச் சுற்றி நிற்கும் மலைகள் தவத்தில் ஆழ்ந்திருக்கும் முனிவர்களைப் போலக் காண்கின்றன. விரிந்த வானம் எல்லையில்லாத கீதத்தை இதயத்தில் எழுப்புகின்றது.

புட்டபர்த்தியில் மூன்று பெரிய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஒன்று தசரா. இரண்டாவது மகா சிவராத்திரி. மூன்றாவது பாபாவின் பிறந்தநாள் கொண்டாட்டம். இவ்விழாக்களுக்கு வருவோர் தொகை ஆண்டுதோறும் பெருகிக் கொண்டே இருக்கிறது. பாபாவின் பிறந்த நாட் கொண்டாட்டம் ஒவ்வோராண்டும் நவம்பர்த் திங்கள் 23-ம் தேதியன்று வருகிறது.

சாந்தியை விரும்புவோர்எல்லோரும்அன்றையதினத்தைக் கொண்டாடி பகவானது அருளுக்கு ஆள் ஆவார்களாக.

# பாபாவின் பொன்மொழிகள்.

நீங்கள் ஒரு படத்தை இறைவனாக வழிபடலாமே தவிர, இறைவனைப் படமாக வழிபடக்கூடாது. இறைவன் ஒவ்வொரு பொருளினுள்ளும் இருக்கிறான் என்பதை நம்புங்கள். இதை நம்புவதற்காக உங்கள் இதயத்தை மாசுமறுவின்றித் தூய்மை ஆக்குங்கள்.

*   *   *   *

இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றார். அவர் உயிர் உள்ள எல்லாப் பொருள்களினுள்ளும் உறைகின்றார். ஆதலால் தான் இந்தியாவில் மக்கள் மரங்களையும், செடிகளையும், பறவைகளையும், மிருகங்களையும் வழிபடுகின்றனர். ஏனெனில் ஒவ்வொரு பொருளினுள்ளும் இறைவனை உணர்கின்றனர்.

*   *   *   *

''அஹிம்ஸா பரமோதர்ம'' இந் நாட்டில் அஹிம்சையின் முக்கியத்துவம் வலியுறுத்தப் பட்டு தொன்று தொட்டு போதித்திருந்துங் கூட, இங்கு இப்பொழுது நீங்கள் கத்தியை எடுத்து மற்றவர்களைத் துன்புறுத்த முயற்சிக்கிறீர்கள். இச்செயல் இந்நாட்டின் பண்பாட்டிற்கே மிகப் பெரிய அவமானத்தை ஏற்படுத்துகிறது. உண்மையைச் சொன்னால் ஹிந்து என்ற வார்த்தையின் அர்த்தம் ஹிம்சையிலிருந்து தூர விலகியிருப்பவன் என்பதாகும்.

*   *   *   *

நீங்கள் தர்மத்தின் மூலம் தான் வெற்றி கொள்ள முடியும். தர்மம் சுய சரணாகதி மனப்பான்மையைத் தூண்டி அபிவிருத்தி செய்கிறது. உங்கள் புலன்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் ஆர்வங்களுக்கும் கர்மத்தின் பயிற்சி அளிக்கவேண்டும். இல்லாவிட்டால் உங்களிடத்தில் திட நம்பிக்கையும்

உறுதியான பற்றின்மையும் இருக்க முடியாது. இறைவன் தர்ம சொரூபியாக இருக்கிறார். நீங்கள் தர்மத்தின் எல்லைக்கு அப்பால் காலை வைத்து விளையாடினால் வாழ்வு என்னும் விளையாட்டில் வெற்றி பெற முடியாது.

★ ★ ★ ★

இறைவன் சிலருக்குத் தண்டனை கொடுக்கிறார். சிலருக்குச் சகாயம் புரிகிறார் என்று நீங்கள் சொல்கிறீர்கள். நான் சொல்கிறேன், இறைவன் இந்த இரண்டில் எதையுமே செய்வதில்லை. அவர் கம்பியுள்ள மின்சாரத்தைப் போன்றவர். மின்சாரம் விசிறியைச் சுழலச் செய்து வாழ்வைக் குளிர்ச்சியாக்குகிறது. மின்சார நாற்காலியை இயக்கி வாழ்வை அழிக்கிறது. அதற்கு விருப்பு வெறுப்பில்லை. இறைவனின் அருள் வீசுகின்ற காற்றைப் போன்றது. கப்பற் பாயைச் சுருட்டிக் கட்டிவிட்டால் படகு அமைதியாக இருக்கிறது. அதை விரித்துக் கட்டினால் படகு மிக மிக வேகமாக நகருகிறது. மேலும் இறைவனின் அருள், ஒளியைப்போன்றது. அந்த ஒளியைப் பயன் படுத்தி ஒருவன் நல்லதைச் செய்கிறான். மற்றவனோ அதே ஒளியைப் பயன்படுத்தி தீயதைச் செய்கிறான். புற இருள் இருப்பினுங்கூட அக ஒளி உடையவராக இருங்கள். அவ்வொளி பிரகாசத்துடன் ஒளிரட்டும்.

★ ★ ★ ★

வந்தது வரட்டும் என்று தைரியமாக இருக்க வேண்டும். திருப்தியுடன் வாழவேண்டும். ஆசைகளைப் பெருக்கி அவதிப்படக்கூடாது. உடலின் வெப்பம் ஏறினால் கம்பளியை உதறி எறிகிறீர்களல்லவா? இறைவன்பால் பக்தி என்னும் வெப்பம் அதிகரித்தால் ஆசை என்னும் உல்லன் அங்கியை அவிழ்த்தெறியலாம். அவன் அருள் பெற முயற்சி செய்யுங்கள். அதைவிட விலை குறைந்த மற்றொன்றை விரும்பாதீர்கள்.

ஆன்மீக பலனைக் கோர வேண்டும்; பொதுவான பலனைக் கோரவேண்டும்; என்றும் கிடைக்கும் பலனைக் கோர வேண்டும்; அது தான் புத்திசாலிகள் லட்சணம். கீழான குறுக்கான நிற்காத பலனை ஏன் கோர வேண்டும்? இறைவனின் திட்டம் எது என்று அறிந்து அதன்படி நடக்க முயலவேண்டும். தர்மத்தை நிலை நாட்டுவதே அந்தத் திட்டம்! ஆகையால் நீங்களும் தர்ம மார்க்கத்தைக் கடைப்பிடியுங்கள்.

# நிர் விகல்ப சமாதி

(டாக்டர். T. நல்லைநாதன்)

1965 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ந் திகதி நான் சென்னையிலிருந்தேன். 13-ந் திகதி காலையில் நான் அவருடைய தரிசனத்தைப் பெற்றேன். பகவான் கருணையுடன் என் நெற்றியில் விபூதியிட்டார். ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்களின் கூட்டத்தில், நான் முதன் முதலாக ஆசீர்வதிக்கப் பட்டவன் என்பதை அப்போது உணரவில்லை.

அன்று இரவு இருபதினாயிரம் மக்கள் பூரணமான அமைதியுடன் உட்கார்ந்திருந்த கூட்டத்தில் அவருடைய உரையைக் கேட்டேன். மேடையிலிருந்து சிலயார் தூரத்திலேயே நான் அமர்ந்திருந்தேன். சில வேளைகளில் பகவான் தன்னுடைய சிரசின் மகுடத்தை எனக்குக் காட்டிக் கொண்டிருந்தார். அது எதற்காக? அவருடைய தலை முடியின் உச்சியில் ஒரு பொன்மயமான ஜோதியை நான் கண்டேன். அதுவே பிரம்ம ரந்திரத்திலிருந்து மேலெழுந்த குண்டலினி சக்தி. அதைக் கண்ட நான் என் வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்து வந்தேன்.

நான் என்னுடைய முடிவை உறுதிசெய்து கொள்ள விரும்பினேன். பகவான் என்னுடைய ஆவலை அறிந்திருந்தார். 14-ந் திகதி நடக்கவிருக்கும் விருந்திற்கு என்னையும் அழைக்கும்படி பகவான், மேஜர் ராயணிகரிடம் இயம்பினார். அங்கு பகவான் மூன்றுமணி நேரத்திற்கு மேலிருந்தார். அந்தப் பொன் மயமான ஜோதியைப் பற்றி நான் அவரிடம் கேட்கும் வாய்ப்பைப் பெற்றேன். அது என்னுடைய மாயை அல்ல என்று அவர் உறுதியாகக் கூறினார். என்னுடைய விருப்பத்தை மட்டுமே அவர் நிறைவேற்றியிருக்கிறார்.

அதுமட்டுமே வாழ்வின் இலட்சியம் அல்லவென்றும் அது இன்னும் மேலானது என்றும் என்னை எச்சரித்தார்.

யோகி ஒருவர் இலட்சியத்தை அடைவதற்கு முன்பு அவர் அடைய வேண்டியதற்கு இன்னும் தொலை தூரம் இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக எல்லா சாஸ்திரங்களும் முனிவர்களும் குண்டலினி சக்தி சகஸ்ரார சக்கரத்திற்கு எழுச்சி பெற்றதே நிர்விகல்ப சமாதி என்று வர்ணித்திருக்கின்றனர், என்று அவர் இயம்பினார். மேலும் அது சரியல்லவென்றும், வேதங்களின் யக்ஞங்கள் மானிடனை வாழ்வின் இலட்சியத்திற்குக் கொண்டு செல்லாது என ஸ்ரீமத் பாகவதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதையும் கூட கூறினார்.

பாபா தன்னுடைய சம்பாஷணைகளில் அவ்விதமான அநுபவத்திற்குப் பிறகு மானிடன் 21 நாட்களுக்குமேல் வாழ்ந்திருக்க முடியாதென்றும், ஏனெனில் அவனுக்கு உணவுகூட இறைவனாகத் தோன்றுமென்றும், அதுவும் அவனுக்கு இறைவனின் மெய்ப்பொருள் என்றும் பகர்ந்திருக்கிறார். அம்மாதிரியான மனிதன்ஒருவனுக்குஉண்பதும்,குடிப்பதும்முடியாததாகும்.ஆதலால்உடல்அழிந்துவிடுகிறது.

துரியநிலையில், ஒருமையின் யோக அனுபவம் போதுமானதல்ல என பாபா வலியுறுத்துகிறார், நிர்விகல்ப சமாதியடைந்த ஞானி, ஸ்தூலநிலையிலும் கூட, எக்காலத்தும், எங்கும், எப்பொருளிலும் இறைவனைக் காண்பார். அம்மாதிரியான ஒருவருக்கு எந்நிலைகளும் நீர்கசிவு இல்லாமல் தடுக்கப்பட்ட இடமல்ல.

இந்தியாவின் புகழ்பெற்ற பெண்ஞானி ஒருவரின் தலைசிறந்த சிஷ்யர் ஒருவர், அவர் எப்பொழுதும் நிர்விகல்ப சமாதியிலிருந்ததாக என்னிடம் ஒருமுறை கூறினார். அவருடைய தரிசனத்தைப் பெறும் வாய்ப்பு எனக்குக் கிட்டியபொழுது, அவர் உறங்கும்பொழுது கூட நிர்விகற்ப சமாதியில் இருந்தாரா என்று கேள்வி கேட்குமளவுக்கு நான் முன்னேற்றம் அடைந்திருக்கவில்லை. இலங்கையில் இந்த யோக அனுபவங்களை விரும்பும்பொழுது பெறக்கூடிய குரு ஒருவரை எனக்குத் தெரியும். ஆனால் அவர் உறங்கும் பொழுது ஆனந்தமய கோச நிலைக்கு மேல் செல்லமாட்டார். இறுதியில் அவர் எனக்களித்த கருத்து அதுதான்.

பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவும், சீரடி சாயிபாபாவும், மேலான நிலையின் உதாரணங்கள் தான். அவர்கள் தாங்கள் எப்பொழுதும் உறங்குவதில்லை என்பதை நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். பகவான் தொடர்ந்து நம்மை ஆசீர்வதிக்கட்டும்.

# இயற்கையே சோதிடம்

(ச. இ. அப்புத்துரை சோதிடன் - வெள்ளவத்தை)

## பாடம்: 9 ★ சுதர்மம்

சோதிடத்தில் 9-ம் இடம் பிதிர் புண்ணியம் பாக்கிய ஸ்தானமாகும். தத்துவத்தில் 9 நவவாயில்களும் நவக்கிர கங்களாகும். இவை முன் பாடத்தில் தரப்பட்டிருக்கின்றன.

சாதகத்தில் முதலாமிடம் சாதகர் ஐந்தாமிடம் புத்தி ரர் ஒன்பதாமிடம் பிதா புண்ணியஸ்தானமாகும். இவை சுற்றிச் சுழன்று, திரும்பத் திரும்பச் ஜெனனமெடுப்பார் கள். 1, 5, 9-ம் இடம் திரிகோணமெனப்படும். உதாரண மாகச் சில பிள்ளைகள் பிறக்கும்போது, பெற்றோரின் மூதா தையரின் நட்சத்திரம் லக்கினங்களில் பிறக்கின்றதை நாங் கள் காண்கின்றோம். இதையே சுதர்மமெனப்படும்.

வாழ்க்கைத் தத்துவம் சுதர்மம் புரிதல், வாழ்க்கை யின் பெருந் தத்துவங்கள், மூன்று கூறப்பட்டிருக்கின்றன. அவை: 1. ஆன்மாவின் அழியாமை, அல்லது சிதைவின்மை 2. உடலின் இழிவு. 3. சுதர்மத்தின் தவிர்க்க முடியாமை இவற்றுள் சுதர்மம் கடமையாயமைய எஞ்சிய இரண்டும் நாம் அறிதற்குரியவை ஆகின்றன. இந்தச் சுதர்மம் நமக்கு இயற்கையிலேயே கிட்டுவதொன்று. சுதர்மத்தைத் தேடிக் கொண்டு நாம் எங்கும் போகத் தேவையில்லை. நாம் ஏதோ ஆகாயத்தில் இருந்து குதித்துப் பூமியில் நடக்கத் தொடங்கினேம் என்பதல்ல, நாம் பிறப்பதற்கு முன், இந் தச் சமூகமிருந்தது!

நம் தாய் தந்தையர் இருந்தனர், அண்டைய அயலா ருமிருந்தனர், இத்தகைய இந்த ஜனவெள்ளத்தில் நாம் பிறக்கின்றோம். ஆகையால் எந்தப் பெற்றோர் வயிற்றில் நான் பிறக்கின்றேனே, அவர்களுக்குப் பணிபுரிதல் என்ற

கடமை எனக்கு அப் பிறவியிலேயே அமைந்துள்ளது. அவ்வாறே எந்தச் சமூகத்தில் நான் பிறந்தேனே, அதற்குச் சேவை செய்தல் என்ற கடமையும் இயல்பாகவே எமக்கு ஏற்பட்டுள்ளது. உண்மையில் நாம் பிறக்கும்போதே, நம் சுதர்மமும் பிறந்து விடுகிறது என்று சொல்வதோடு நில்லாது, நாம் பிறப்பதற்கு முன்பே அது நமக்காகக் காத்து நிற்கிறது எனலாம். ஏனெனில், அது நம் பிறவிக்கே காரணமாயிருக்கிறது. நாம் பிறவி எடுப்பது அது நிறைவேறும் பொருட்டே. சுதர்மத்தை, மனைவி, மக்களுடன் ஒப்பிடுவதிலும் பார்க்கத், தாயுடனே ஒப்பிடுதல் பொருத்தமாயிருக்கும். நாம் எம் தாயை இங்கே பிறந்த பிறகு தீர்மானித்துக் கொள்ளவில்லை. என் தாய் யார் என்பதை முன்னரே எனக்காகத் தீர்மானிக்கப்பட்டு விட்டது. அவர் எப்படிப்பட்டவராயினும், இப்பொழுது அவரை என்னுல் தவிர்க்க வியலாது. சுதர்மத்தின் தன்மையும் இத்தகையதே. இவ்வுலகில் சுதர்மத்தைத் தவிர வேறு ஆதரவேயில்லை. சுதர்மத்தைத் தட்டிக் கழித்துக் கொண்டு போதல் தன்னையே புறக்கணித்தல், தற்கொலை புரிந்து கொள்ளுதல் ஆகும். சுதர்மத்தின் உதவிகொண்டுதான் நாம் முன்னேற முடியும். ஆகையால் இந்தச் சுதர்மத்தின் ஆதரவை எவரும் என்றும் விடலாகாது. இது வாழ்க்கைத் தத்துவமாய் உறுதி பெற்றதொன்று.

சுதர்மம் நமக்கு வெகு சுலபமாய் இயற்கையாய்க் கிடைப்பதொன்று. ஆகையால் தாமாகவே அதைச் செய்து வரவேண்டும். ஆனுல் பலவகை மோகங்கள் காரணமாக நாம் இவ்வாறு செய்வதில்லை. செய்தாலும் மிக்க சிரமத்தோடு செய்வதாயும் பலவகையான விஷம் போன்ற குற்றங்குறைகளுடன் கலந்து, சுதர்மத்தின் பாதையில் முட்களைப் பரப்புமிந்த மோகங்கள் வெளி உருவங்களுக்கு ஓர் அளவேயில்லை. ஆகவே ஆன்மா அழியாதது. ஆக்கையும் அழியாவிட்டால் அது பெரும் ஆபத்தாய் முடியும் என்கிறூர் பகவான் அர்ச்சுனனுக்கு. இந்த ஆன்மாவை யாராலும் அழிக்க முடியாது. இந்த ஆக்கையோ, (கறைபடிந்த)

அழுக்குப் படிந்த ஆடை போன்றது. ஆகவே க்ஷத்திரிய தருமத்திற்குரிய சுதர்மமாகிய கடமையைச் செய் என்கின்ருர் கிருஷ்ண பரமாத்மா. யுத்தபூமியில் நிற்கும் பார்த்தனைப் பார்த்து உன் குலதர்மமாகிய (அறத்தை) சுதர்மத்தைக் கைவிடாதே என்கிருர்.

கீதையின் குறிக்கோள் மோகத்தைக் கொல்லல். அருச்சுனன் அகிம்சையை மட்டுமா பேசிஞன். சன்னியாசத்தைப் பற்றியும் பேசத் தொடங்கி விட்டான். இரத்தம் தோய்ந்த இந்த க்ஷத்திரிய தருமத்தை விடச் சன்னியாசமே சிறந்தது என்று அவன் சொல்லுகின்ருன். ஆஞல் அது அருச்சுனனின் சுதர்மமா? அவனது தொழிலா அது? அருச்சுனன் வெகு ஆனந்தமாகச் சன்னியாசி வேஷம் போட முடிந்தாலும் அதன்படி அவஞல் எப்படி நடக்க முடியும்? சன்னியாசம் என்று சொல்லிக்கொண்டு அவன் காட்டுக்குப் போஞலும் அங்கே மான் வேட்டையாடத் தொடங்கிவிடுவான். ஆகையால் பகவான் அருச்சுஞ நீ நான் போர்புரியமாட்டேன் என்று சொல்லுகிருயே இது ஒரு மயக்கம், இன்றுவரை உனக்கு இயற்கையாய் இருந்து வந்திருக்கும் ஒன்று உன்னேச் சண்டையில் புகுத்தாது, விடாது, என்று வெளிப்படையாகவே சொல்லிவிட்டார். அருச்சுனனுக்குச் சுதர்மம் விகுணமாக (சிறப்பற்றதாக)த் தோன்றலாயிற்று. ஆஞல் சுதர்மம் எவ்வளவுதான் விகுணமாயிருந்த போதிலும் அதிலிருந்தபடியேதான் மனிதன் தன்னே வளர்த்துக்கொள்ள வேண்டும். இதிலிருந்தால் மட்டும் வளர இயலும். வளர்ச்சியின் சூத்திரமுமாகும். இது பெரிதென்று கருதி ஏற்பதும், சிறிதென்று விட்டுவிடுவதும் சுதர்மத்தின் விஷயத்தில் தகாது. அது சிறிதுமல்ல, பெரிதுமல்ல அது நமது சக்திக்கு ஒத்து அமைகிறது.

கீதையின் பரிபாஷைகளில் சில வாசக நேயர்கட்கு அறியத் தருவது.

பெரிய ஓர் மரக்குத்தி, கர்மமாகும். இதில் தீயை மூட்டிஞல் விகர்மமாகும். தீ வளர்ந்து செந்நிறமாய் சோதி

யாய் மாறிப் பின் சாம்பராகிறது. இதையே அகர்மமெனப் படும். இதை எல்லோரும் எடுத்து உடலில் பூசிக்கொள் வார்கள். கர்ம விகர்ம அகர்மமிவையே பற்றில்லாத சுதர்ம மெனப்படும்.

தாய் கன்மம், தந்தை கூடியதும் விகர்மம் (கர்ப்பிணி) பிள்ளையே அகர்மமாகும். இப் பிள்ளையே வருணாச்சிரம முறைப்படி சுதர்மமாகும். இப்பிள்ளையை எல்லோரும் வாரி எடுத்து மடிமீது வைத்து முதுகைத் தடவி முத்தமிடு வார்கள். இதுவே வாழ்க்கைத் தத்துவமும் சுதர்மமுமா கும். வருணாச்சிரம தர்மமே (குலாசாரதர்மமே) சுதர்ம மாகும்.

★★

## "கந்தவேல் முருகத் தெய்வம்"

(கி. கணபதிப்பிள்ளை)

இராகம்: மாண்டு. கண்ணிகள் தாளம்: தேசாதி.

— கந்தன் —

கந்தன் என்ற தெய்வம் — என்னைக்
காக்கும் அன்புத் தெய்வம் — என்றன்
சிந்தை வாழுந் தெய்வம் — என்னைச்
சேர்த்தணைக்கும் தெய்வம் — தெய்வம் (கந்த)

— வேலன் —

வேலன் என்ற தெய்வம் - என்னை
ஆளவந்த தெய்வம் - ஆல
காலமுண்ட தெய்வம் - தந்த
அழகு ஞானத் தெய்வம் - தெய்வம் (கந்த)

— முருகன் —

முருகன் என்ற தெய்வம் - அன்பர்க்(கு)
உருகுகின்ற தெய்வம் - என்றன்
அருகிருந்து காக்கும் - கருணை
ஆறுமுகத் தெய்வம் - தெய்வம் (கந்த)

# புட்டபத்தியின் புண்ணிய மூர்த்தி

கலாநிதி. வி. கே. கோகாக் அவர்கள்

[பேராசிரியரும், இந்திய (சிம்லா) உயர்கல்வி நிறுவனத்தின் இயக்குநரும், பங்களூர் சர்வகலாசாலையின் உதவி அத்தியட்சகரும்]

தமிழாக்கம்: ம. சி. சிதம்பரப்பிள்ளை

## முகவுரை.

### மக்களின் எண்ணிக்கை

உலகத்தோடு ஒட்டி வாழும் மக்களுடன், மிகத்திறமை வாய்ந்த மனிதன், ஆண்டவனுடைய அநுக்கிரகம் பெற்ற மனிதன், உலகத்துக்கே பொதுவான மனிதன், தாகூரின் கருத்துணர்வுக்கமைய விஸ்வ — மனுவ — எவ்வளவு குறைவான எண்ணிக்கையாகக் காணப்படினும் கடவுள் மனிதர் என்பவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

### கடவுள் மனிதர்

ஸ்ரீசத்தியசாயிபாபா அவர்கள் கடவுள்மனிதர் என்றவகுப்பைச் சார்ந்தவர். இவர் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தவர். இவரை அறிவதோடு இவரது வாழ்க்கையின் குறிக்கோள் யாது? என்ன என்பதனையும் அறியும் அறிவும் வேண்டப்படுகின்றது.

இவருடைய தோற்றத்தில் மிகவும் இணையற்றதாகக் காணப்படுவது எதுவெனில், கூர்மையானதும், ஆழமறிய முடியாததுமான அருட்கண்களினுலும் திருமுகத்திலிருந்தும் வெளிவரும் அருள் வாக்கியங்கள் என்பார்கள் சிலர்! ஆனுல் ஒளிவட்டமாகத் தோன்றி மக்களை மலரவைக்கும் அவருடைய தலைமுடி என்பது பலரும் கண்டு அநுபவிப்பது!

# "பொன்று முடலைப்- போற்றுதல் ஒழித்தும்"

இவர்களுடைய அன்பர்கள் மிகவும் ஆடம்பர வாழ்க்கையற்றவர்களாக இருந்தும், தமக்கு மிகவும் விலையுள்ள உண்டிகளைத் தேடித் தருங்காரணத்தால், இவர் பால், பழம், ருசியான உண்டிகளை உண்பதிலிருந்து தவிர்த்து வருகின்றார்கள்.

நித்திரை கொள்ளும் காலமும் சில மணிநேரமேயாகும். காலை 7 மணிக்கே அடியார்களுக்கு தெரிசனம் அளிக்க ஆரம்பித்து விடுவார். ஒன்பது மணியிலிருந்து பகல் பன்னிரண்டரை மணி வரை நோய் நொடியுள்ளவர்களுடனும் ஆத்மலாபத்தை நாடி வருபவர்களுடனும் உரையாடிய வண்ணம் இருப்பார்.

மாலை ஒரு மணி தொடக்கம் நாலு மணி வரை தமக்கு வரும் நூற்றுக்கணக்கான கடிதங்களைப் பார்வையிடுவார். இக் கடிதங்கள் பல் வேறு மொழிகளில் வரும். வேறு ஒருவரையும் கடிதங்களைத் திறக்க விடுவதில்லை. சில கடிதங்களுக்கு தாமாகவே பதிலும் வரைவார். மாலையில் மீண்டும் தெரிசனம் கொடுக்க ஆரம்பித்து விடுவார். இவரால் தொடக்கப் பட்ட கல்லூரிகள், வைத்தியசாலைகளின் நிருவாக சம்பந்தமான அலுவல்களைப் பற்றிய விடயங்கள் பேசுவதற்கும் சபை கூட்டுவார். சில பக்தர்களுடன் உண்மையைப் பின் பற்றுவது எவ்வாறு? என்ற விசாரணைக்கு விளக்கம் கூறுவார்கள். "சனாதன சாரசி" எனும் மாதாந்த சஞ்சிகைக்கு மாலை நேரத்தில் கட்டுரை வரைவார். இருந்தும் பஜனைக்கும் ஆத்மீக எழுச்சியை ஊட்டும் கீதங்கள் பாடுவதற்கும் நேரம், காலம் என்பது கிடையாது. பெரிய கூட்டங்களில் உரை நிகழ்த்தும் போதும், உரையாடலின் போதும், பாடும் சக்தி தானாகவே வெள்ளம் பெருகுவது போன்று பெருகி வரும். தினமும் நெருக்கமான நிகழ்ச்சிகளாகவிருப்பதனைக் கவனிக்க முடியும்.

# சேவை

மக்களுக்குச் சேவை செய்வதில் இவர் எல்லை கடந்த விருப்பமுள்ளவராக உள்ளார். ஒரே சமமாக யாவர்மீதும் அருள்பாலிக்கின்றார். அவரது வாழ்வும் இதுவே. தர்மத்தையும், நீதியையும் கடைப்பிடிப்பதும், ஆத்மீகத்துறையில், இந்தியாவை பழைய புகழ்வாய்ந்த நிலைக்கு மீட்டும் கொண்டுவருவதுமே தமது குறிக்கோள் எனவும் கூறியுள்ளார்.

இவர் பெரிய கொடையாளி. மக்களுடைய நலன்களைக் கவனிப்பதிலும் இணையற்ற உபகாரி.

## பிறப்பு

ஆந்திரதேசத்தில் உள்ள ஆனந்தபுர மாவட்டத்தில், புட்டபத்தி எனும் நகரில், மிகவும் செல்வாக்குள்ளதும், பக்தியில் திளைத்ததும், பண்பாட்டில் உயர்ந்ததுமான ஒரு நல்ல குடும்பத்தில் 1926ம் ஆண்டு கார்த்திகை மாதம், 23ம் நாள் இவர் பிறந்தார். ஸ்ரீ சத்யசாய்பாபாவுக்கு தற்போது 44 வயது ஆகின்றது. இவர் பிறக்கு முன் புட்டபத்தியைப் பலர் அறிந்திலர். தற்போது இந்த நகரம், பல லட்சக்கணக்கான பக்தகோடிகளுக்கு ஒரு புனித யாத்திரை நகரமாக மாறி உள்ளது.

## அதிசயக் குழந்தை

இளமையில் வீட்டிலும், வித்தியாசாலையிலும், இவர் புரிந்த லீலாவிநோதங்கள் யாவும் இப்போது யாவரும் அறிந்ததே!

இவருக்குப் பிசாசு பிடித்து விட்டதென இவருடைய உறவினர்கள், இவருடைய போக்குகளைக் கண்டு ஊகித்து,

பிசாசு ஓட்டும் மாந்திரீகனை அழைத்து, அவன் மூலம் இவரைப் பலவகையான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டார். மெய்மறந்த நிலையில் பெரிய அறிவாளிகள் போன்று சமஸ்கிருத சுலோகங்களை ஓதிய வண்ணம் பல மணிநேரம் இருந்து விடுவார். முன்கூட்டி அறிய முடியாத ஒரு பிள்ளையாகக் காணப்பட்டார். ஒரு நாள், அப்போது இவருக்கு வயது 13 இருக்கும். பெற்றோர்களைப் பார்த்துச் சொன்னார் ''யான் சாய்பாபா. இந்த இடத்தில் இனிமேல் தங்கமாட்டேன். என்னை என்னுடைய பக்தர்கள் கூப்பிடுகிறார்கள்'' என்று கூறிவிட்டு, வீட்டைவிட்டுக் கிழம்பிவிட்டார். அண்மையில் உள்ள தோப்பில், பல பக்தர்கள் சூழ, அவருடைய பஜனை நாம வழிகளில் முதலிடம் பெற்றுள்ள,

''மானச பஜரே குருசரணம்
துஸ்தரபவசா கரதரணம்''

என்னும் நாம வசனங்களைத் திருவாய் மலர, மக்கள் கூட்டம் மிகுந்த கழிபேருவகையுடன் பாடி மகிழ்ந்தார்கள். இவருடைய திவ்ய நாவிலிருந்து பிறந்த எத்தனையோ பஜனை நாமங்களை இலட்சக்கணக்கான மக்கள் பாடி மகிழ்ந்து வருகின்றார்கள். இனிமையான சங்கீதத்தையும் மெய்ப்பாட்டுணர்ச்சியையும் தூண்டக்கூடிய இந்த அகண்ட நாம பஜனையின் தாக்கத்தின் தன்மையை அதிலீடுபட்டு அநுபவித்தாலன்றி அதனுடைய தன்மையை, இத்தன்மையது என எழுத்தில் வடித்தல் இயலாததொன்று!

## எதிர்காலத்தை முன்கூட்டியறிதல்

பாபா அவர்களை உலகம் அறியச் சில காலம் எடுத்தது. ஒரு சில பக்தர்களுடன் மிகவும் அறியப்படாத வராகவே இருந்து வந்தார். அவர் அடிக்கடி அக்காலங்களில் சொல்லுவார்; ''இப்போது என்னை வந்து அடைவது மிகவும் இலகுவாக உங்களுக்கு இருக்கின்றது. சில வருடங்களின் பின்பு ஒரு கணத்தோற்றம் காண்பதற்கு மைல்கணக்கான தூரத்

தில் நிற்க நேரிடும். அவ்வளவுக்கு அன்புள்ள, நம்பிக்கை யுள்ள பக்தர்கள் கூடிவிடுவார்கள்'' இவருடைய புகழ் நாளடைவில் பரவியுள்ளது.

## சகலமதசங்கமம்

பாபா அவர்களைத் தரிசிக்குந்தோறும், ஒருவர் யேசுநாதரையும், புத்தரையும், சங்கரரையும், விவேகானந்தரையும் நேரில் தரிசிப்பதாகக் காணும் அநுபவம் கிடைக்கப் பெறுவர். இந்த மகான்களிடம் காணப்பட்ட அதே இரக்கம், ஊறுகளைக்களைவதில் விளைவு முதலிய அற்புத குணங்களை இவரிடம் காணலாம். யேசுநாதரிடம் உள்ள கைப்பட்ட மாத்திரத்தில் நோய்கள் மாறக்கூடிய சக்தியும், மனதை இளகவைக்கும் புத்தபெருமானுடைய பேச்சுவன்மையும் இவரிடம் இருப்பதனைக் காணலாம்.

## அறிவுஞானம்

உலகில் உள்ள அனுபவம், அறிவு யாவும் இவருடைய திருவடியில் தஞ்சம். தேவைக்குத் தகுந்தவாறு இவர் எடுக்கவேண்டியதே!

தெலுங்கிலும், கன்னடத்திலும், மக்களுக்கு ஆசியுரை வழங்குவார். தமிழிலும், மலையாளத்திலும், தாராளமாகப் பேசுவார். இந்தியிலும், ஆங்கிலத்திலும், சல்லாபமாகப் பேசவும் தெரியும். அரைகுறையாக ஆங்கிலம் பேசத்தெரிந்தவர்களுக்கும் இவர் உரையாடும் ஆங்கிலம் மிகவும் உற்சாகத்தையும் ஒரு சிலிர்ப்பையும் உண்டாக்கும். உதாரணமாக! ''ஒருவர் தான் விரும்பிய வேலையைச் செய்தல் மாத்திரமன்று, அந்த வேலையில் விருப்பமும் இருத்தல் வேண்டும்'' ''உனது கடமையை அன்புடன் ஆரம்பி, அந்தநாளை அன்புடன் கழி; பின்பு அந்த நாளை அன்புடன் நிறைவு செய்'' என்று அழகுறப் பேசுவார்.

1 "One should not only do the work that one likes, but also like the work that one has to do"

2 "Begin the day with love, spend the day with love and end the day with love"

பாபாவின் பரந்த மனப்பான்மை ஒன்றே மக்களை வரையும் மிகவும் அச்சுறுத்தக்கூடிய தொன்றாகும். எந்த விதமான குருவின் விசுவாசமுள்ள பக்தனாக இருந்தாலும் அவருக்கு யாவரும் ஒன்றுதான். அவனவனுடைய விசுவாசிக்கப்படுகின்ற குருவாகவே பக்தர்களுக்கு காட்சி தருகின்றார்.

## ஒரு ஆச்சரியம்!

இவருடைய வாழ்வில் இவர் பெற்ற நிகரில்லாத நிலை என்னவெனில், இவர் தேகத்தை வருத்தித் தவம் செய்யவோ (காயக்கிலேசம்) சித்தி பெறுவதில் முயற்சி செய்யவோ தேவையில்லாது இருந்தது. பிறக்கும்போதே இத் தன்மைகள் இவருடன் பிறந்து விட்டன!

சூரியன் தனது ஒளிமயத்தை மறைக்க எவ்வாறு முடியாதோ, அமானுஷிய மனிதன் எவ்வாறு தன் மூலம் அதிசயங்களைவெளிப் படுத்தாமல் இருக்க முடியாதோ, அதே போன்றதே தெய்வமனிதனின் இயல்பு. சாதாரண மக்களாகிய எங்களுக்கு இவைகள் யாவும் அற்புதமாகத் தோன்றலாம். தெய்வமனிதனுக்கு ஆனால் இவைகள் சர்வசாதாரணம்.

இவராற்றும் அதியற்புதம் எதுவெனில், ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருந்து இவரை மனத்தில் தியானித்து, துன்புறும் நோயாளியின் துன்பங்களைத் துடைப்பதுவே! மூக்கில் கை வைத்து ஆச்சரியப்படக் கூடியதும் வைத்திய பரிசீலனைக்கு அப்பாற்பட்டதுமான நற்பலன்களை இவர் அள்ளி அள்ளி அருளுகின்றார்.

இவைகளிலிருந்து என்ன அறியக் கிடக்கின்றது? உண்மை, அன்பு, சக்தி, இவையாவும் இவரிடம் வெளிப்படையாக உண்டு என்பதே!

## ஆத்மீகத்துறை

இவ்விதமான அற்புதச் செயல்கள் யாவும் எங்களைப் போன்ற மானுடச் சட்டை போட்டவர்கள் மூலமாகவே வெளியிடப்படுகின்றது.

பாபா ஏதாவது அதிசயங்களைச் செய்தால் அதற்கு இவர் கூறும் சமாதானம்; 'மக்களை ஆத்மீக வாழ்க்கைக்கு மீண்டும் கொண்டு வருவதற்காகவே' எனவும், பக்தர்கள் விரும்புவதை தான் அருளுவதற்குக்காரணம் கற்பிக்கின்றார் அது என்னவென்றால், ''மக்கள் எதனை விருப்பங்கொள்ள வேண்டுமென்று பாபா விரும்புகின்றாரோ அவைகளை அவர்கள் அடைவதற்காகவே'' என்பதாகும்.

இவ்வித அதிசய புருடனான பாபா அவர்களுடைய இருதயம் ஒருசிறு குழந்தையினுடைய நெஞ்சை ஒத்து உள்ளது. சிறு குழந்தையைப் போன்று சல்லாபம் செய்தும், விளையாடியும் செய்வதோடு நில்லாமல், உலகில் உள்ள ராஜதந்திரிகள் அல்லது தூதர்களிலும் பார்க்க மிகவும் கூர்மையான புத்தியும் சாதுரியமான தீர்ப்பும் நிரம்பியுள்ளவராகவும் காணப்படுகின்றார். எவ்வளவு சமத்கார — காரணமாக உயர முடியுமோ அவ்வளவுக்கு நுண்மையிலும் உயரக் கூடியவர்.

## உபதேசம்

பாபாவின் தத்துவஞானம் - பொதுமக்களுக்கும் இலகுவில் விளங்கக் கூடியதே. அது பாரம்பரியமானது. இவருடைய இனிமையான பஜனைகளும், உவமானங்களும், மக்களை இலகுவில் வசீகரிக்கச் செய்யும் உபதேசங்களும், கதைகளும் யாவும் புத்தரையும், இந்தியாவில் உள்ள ஞானிகளையும், யேசுகிறிஸ்துவையும் ஞாபகப்படுத்துவதாகவும் இருக்கின்றது. இவர் கூறும் கதைகள்யாவும் தனது சொந்த அருள் வாக்காகவே அருளுகின்றார். பொதுமக்க

ளுடைய நெஞ்சை அள்ளுவதாகவும், அவர்களுக்கு மிகவும் சுபாவமானதாகவும் இருக்கின்றன. அதே நேரத்தில் இவருடைய அருள் மொழிகளும் உபதேசங்களும் இக்கால தத்துவஞானிகளையும் அறிவாளிகளையும் மலைக்க வைக்கக் கூடியதுமாக இருக்கின்றன.

இவருடைய உபதேசத்தில் முக்கியமாக நான்கு சொற்கள் அதிமுக்கியம் வாய்ந்தனவாகும். அவைகளாவன:— சத்தியம் (உண்மை) தர்மம் (நீதிக்கு அமைவாக நடத்தல்) சாந்தி (சமாதானம்) பிரேமை (அன்பு) என்பனவாகும். ஆண்டவனை நாடி விசாரணையிலீடுபடுபவன் எந்த நிலையிலும் உண்மைக்குப் பிறளாமல், சொல்லும் செயலும் உண்மையிலும் அன்பிலும் அமைந்ததாக இருக்கவேண்டும் தர்மம் உண்மையான செயல்களில் அடங்கியுள்ளது.

## அமைதி

ஆத்மீக வாழ்க்கையின் அடித்தளம் அமைதி. ஒருவனுடைய உள் சார்ந்த மனதுக்குள்ளே குத்துச் சண்டைகளிடும் மாறுபட்ட எண்ணங்களுக்கு மாத்திரமல்லாமல், ஆன்மீகக்களிப்புக்குத் தீர்க்கமான அநுபவமாகவும் உள்ளது இந்த அமைதி. அமைதி என்று சொல்லப்படுகின்ற அடிப்பாறையை அமைக்கப்பெற்றால், உள்ளுணர்வும், உள்ளிருக்கும் அழகுத் தெய்வமும் கண் விழிக்கும். அன்பு எனும் அந்தமில்லாத ஆறு அமைதி என்ற அடிப்பாறையின் மீது பாய்ந்த வண்ணமாக இருக்கும். இந்த ஆளுமைத் தன்மை மலர்வதையே பாபா அவர்கள் யாவரிடமும் எதிர் பார்க்கின்றார்கள்.

மலரும் தாமரையாகவும், ஒளி வீசும் நிலவாகவும் பிரசாந்தி நிலையம் யாவருக்கும் காட்சி தருகின்றது!

# பல்துறை ஆக்கவேலைகள்

தனி ஒருவருக்காகவும், கூட்டான மக்களுக்காகவும், பாபா பிரசாந்தி நிலையத்தில், நிகழ்ச்சிகளை உருவாக்கியுள்ளார்கள். தனிமனிதனுடையதும், நாட்டினதும் புத்துயிர்ப்புக் குரியதுமான நிகழ்ச்சிகளாகவும் இங்கு இருக்கும். மக்கட் தொகுதியினரின் புது வாழ்வுக்கு ஒரு அறைகூவலாகவே இங்கு உள்ள நிகழ்ச்சிகள் உள்ளன. மனவெழுச்சிகளைத் தூண்டும் சொல்வன்மை நிறைந்த இவரது உரைகள் கோடிக்கணக்கான மக்களை மெய்மறக்கச் செய்கின்றது. இன்றைய சூழ்நிலையில் யாவும் நிலைகுலைந்து போகின்றதே என்ற மனநிலையில் பாபா அவர்களின் சுழல் காற்றுப் போன்ற திக்விஜயங்களும், அறிஞர்களுக்கிடையிலும், மாணவர்கள், பொதுமக்கள் இவர்களுக்கு ஆற்றும் நல்லுரைகளும் எங்கள் மனதுக்குள் நம்பிக்கை என்னும் தீயை மூட்டிவிடுகின்றது. அவர் ஊட்டும் தெய்வீக நம்பிக்கை அவர் தரும் உறுதிவாக்கியங்கள், யாவும் எங்களுக்கு புது உற்சாகத்தைத் தருகின்றது. இவைகள் யாவும் மத்தியஸ்தானமான ஒரு சக்தியிடமிருந்து வருவதினுல், உறுதியளிக்கக் கூடியதும், வெல்லமுடியாததுமான ஒரு நம்பிக்கையை ஊட்டுகின்றது.

## அன்னதானம்

வசதிபடைத்தவர்களுக்கு இவரிடும் அன்புக்கட்டளை, வசதியற்றவர்களுக்கு அன்னம் படைக்கும்படி. அவ்விதம் அன்னதானம் வழங்கும் போது, தாஞகவே போசனசாலைக்குள் உலவி, தனது மலர்க்கரங்களிஞலேயே மக்களுக்கு உணவு பரிமாறுவார். பின் தங்கிய நாடாகிய இந்தியாவில் இவ்விதமான அன்பளிப்பும் திருப்பணித்தொண்டுமே முதலாவதாகச் செய்யவேண்டியதாகும்.

## அரன் நாமம்

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அமைக்கப்பட்டுள்ள சாயிசமித்திகளின் தொண்டர்களை கிழமைக்கொரு முறையாவதுகூடிப் பஜனையும், தியானமும் செய்யவேண்டுமெனப் பணித்துள்ளார். கடவுளை மறந்திருக்கும் இந்த நூற்றுண்டில் அரன் நாமத்தை அரற்றுவதே அரனை அடைவதற்கு ஒரு வழியாகும் என்கின்றுர். மாசத்துக்கொரு முறையாவது தாங்கள் வாழும் கிராமத்திலோ, நகரத்திலோ, ''நகரசங்கீர்த்தனம்'' செய்தல் வேண்டுமென்கின்றுர். மக்களுடைய வாழ்வில் ஆண்டவனை இம்மார்க்கமாகத் தான் இருத்தலாமென்கின்றுர்.

## மருத்துவமனை

நகரங்களிலும், கிராமங்களிலும் நிறுவப்பட்டுள்ள சாய் மகிலை மண்டலங்களை, மக்களுக்கு நேரும் துன்பங்களைக் களைந்தும், நோய்வாய்ப்பட்டிருக்கின்ற வசதிக்குறைவானவர்களுக்கு மருத்துவ வசதிகளைக் கொடுத்தும், அவர்களை அடிக்கடி சென்று உற்சாகமூட்டியும் ஒவ்வொரு சமூகசேவையையும் தன்னலமற்ற முறையில் செய்யவேண்டுமெனவும் பாபா அவர்கள் வேண்டுகின்றுர். தன்னலமற்ற முறையில் தொண்டுகள் புரியவேண்டும் என்பார்.

மகளிர் மத்தியிலும் ஆன்ம ஈடேற்றத்திற்காக சாயிமகிலை மண்டலங்களை ஸ்தாபிக்க அனுமதித்துள்ளார்.

## சாயிபாலமந்திர்

வருங்கால வீரர்களைத் தருவதும் தாய்மார்களே! அவர்களை வீரர்களாக்குவதும் தாய்மார்களே! சிறுவர்களுக்காக சாயிபாலமந்திர் ஒன்றினை அமைத்தல் வேண்டுமென எல்லோரையும் கேட்டுள்ளார். இளமையிலேயே பஜனை மூலம் தெய்வ நம்பிக்கையின் அழகை அறியும் அறிவைப் புகுத்த

வேண்டும் எனவும், ஞானிகளுடையதும் தன்னுடையது மான சிவகதைகளை சிறுவர்கள் அறியவேண்டும் என வேண்டு கின்றார். எவ்வாறு நல்வாழ்வு வாழலாம் என்பதற்குரிய பாடங்களைக் கற்பிக்க வேண்டும் என்கின்றார்.

## சங்கப்பலகை

ஞானவாழ்க்கையில் நாட்டமுள்ளவர்களைக் கொண்டு ஞானமார்க்க நூல்களை வாசிக்கச் செய்து பலன் அடை வதற்கான சாயி வாசிக வட்டங்கள் அமைக்க வேண்டுமென ஊக்குவிப்பார். வித்வச்சபைகளிலும் கற்றோர்சபைகளிலும் பாபா பங்கு கொண்டு அவர்களுடன் மற்றவர்கள் கருத்துப் பரிமாறுவதில் அக்கறை காட்டுவார். புலமையுள்ள விட யங்களையும் அறிஞர்களுடைய எழுத்தோவியங்களை நூலாக்குவதில் உதவிகளைப்புரிவார். வேதபாடசாலைகள், வைத்தியசாலைகள், வித்தியாசாலைகள், கல்லூரிகள் இவை களை ஆரம்பித்து இவைகளுக்கான செலவுகளையும் ஒழுங்கு செய்கின்றார்.

## சத்தியசாயி கல்லூரி

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் சத்திய சாயி கல்லூரி ஒன்றினை ஆரம்பிக்க வேண்டுமென எண்ணங் கொண்டுள்ளார். இழந்த தனது ஆத்மஜோதியை — ஆன்மா வை - இந்தியமாதா மீண்டும் பெறவேண்டுமாயின் இளம் வயதுள்ள யாவருக்கும் தங்கள் ஆளுமையின் பெருமையை அறிந்து கொள்ளும் வாய்ப்பை இக்கல்லூரிகள் மூலம் பெற் றுக் கொள்ள வேண்டும். பம்பாய் நகரிலுள்ள தர்மக்ஷேத் ரா மனிதனுடைய பலகோணமுடைய ஆளுமையைப் பூர ணப் படுத்துவதில் முக்கியபங்கு எடுக்கும் ஓர் ஞானபீட மாகும். பம்பாய் நகரிலுள்ள கோடி சீமான்களின் நிதி உதவியால் இந்த ஞானபீடம் ஒளிதந்து கொண்டிருக்கின் றது.

## வாழ்வு சிறக்க

மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பல்வகையிலும் உயர்த்த வேண்டும் என்றும் மக்களுக்குப் புதுவாழ்வு கொடுக்க வேண்டும் என்றும் இரவுபகலாக பேசிக்கொண்டு இருக்கும் இவ்வேளையில் பாபா அவர்கள் பகலும் இரவும் அடக்கமாகவும் அமைதியான முறையிலும் பணிகளாற்றிக் கொண்டே இருக்கின்றார். வேறு ஒருவராவது இவரைப் போன்று தன்னலமற்ற பணிகள் செய்வாரில்லை.

## சுயசரிதை

அமெரிக்க தேசத்தறிஞர் ஒருவர் பாபாவைத் தரிசிக்க ஒருமுறை சென்றார். உலக மக்கள் பாபாவை அறிய வேண்டுமென ஆவல் கொண்டு பாபாவினுடைய சுயசரிதையை எழுத விருப்பங் கொண்டார். பாபா மிகவும் தாழ்மையுணர்ச்சியுடன் அமெரிக்க அன்பரின் உரைகளைக் கேட்டபின் மிகவும் விநயமாகப் பின்வருமாறு கூறினார். 'நீர் விரும்பிய சுயசரிதையை எழுதுவதற்கு இன்னும் பத்தாண்டு பொறுத்திரும். முதலாவதாக, யான் உங்களுக்கு ஏற்கத்தக்கவனா என்பதனைத் தெரிந்து கொள்ளவும். எனது சரிதையை எழுதிவிட்டு, ஐந்து ஆண்டு கழித்து அச் சரிதை பிரயோசனமற்றது எனக் கண்டு நிராகரித்து விட்டீர்களானால் உமது முயற்சி வீண் முயற்சியாகி விடும். நீர் என்ன எழுதப் போகின்றீர் என்பதனை ஆராய்ந்து முதலாவதாக அறியவும். பத்தாண்டு கழித்து எனது சரிதையை எழுத எண்ணம் இருக்குமாகில் நீங்கள் அப்போது எழுதலாம்.'

''மானச பஜரே — குருசரணம்
துஸ்தரபவசா — கர தரணம்

சாந்தி! சாந்தி! சாந்தி!

★
★★

# அப்பர் அருளமுதம் - 12
## (முத்து)
## தோன்றாத்துணை

அறிவுக்கும் அனுபவத்திற்கும் தக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவர் துணையாக அமைகின்றனர். குழந்தைக்குத் துணை தாய்; தாய்க்குத்துணை தந்தை; தந்தை வயதாகி விட்டார். மகன்துணை என நினைக்கின்றார். தாய் வயதாகி விட்டாள். மகள்துணை என நினைக்கின்றாள். மகள் கணவன் துணை என்றும், மகன் மனைவி துணை என்றும் இப்படி ஒரு சுழல் வட்டம்.

புகையிரதத்தில் முன்பின் அறியாத இருவர் அக்கமும் பக்கமுமாக அமருகின்றனர். இருவரும் தனிக்கட்டைகள். சில நிமிடங்களுக்குள் இருவரும் சினேகிதராகி விட்டனர். அடுப்படியிலிருந்து அரசியல் வரை பேச்சு நிகழ்ந்தது. இடையில் ஒருவர் இறங்கினார். இறங்கும் போது நல்ல பேச்சுத் துணையாக இருந்தீர்கள் என நன்றி தெரிவித்துச் சென்றார்.

மரத்துக்குத்துணை மண்; கிளைக்குத்துணை மரம்; இலைக் குத்துணை கிளை; பூவுக்குத் துணை இலை. இப்படி உலக மெல்லாம் ஒன்றுக்கொன்று துணை.

ஆனால் இத்தனைக்கும் ஒரு துணை உண்டு. அதுதான் ஆண்டவன். எல்லாருக்கும் ஆண்டவன் துணை என்று வாயால் சொல்லுகிறார்கள். மனம் சொல்லுகிறது நான் தான் எல்லாருக்கும் துணை. 'நான் இல்லாவிட்டால் இவர் என்ன செய்திருப்பார்'

'நான் செய்ததை எல்லாம் மறந்துவிட்டான்'

'என்னை யாரென்று தெரியுமோ'

'என்னை யாரென்று காட்டுகின்றேன் பார்'

இவ்வாக்கியங்கள் எல்லாம் ஆண்டவன் துணையை மறந்த வாக்கியங்கள்.

கண்ணால் காணும் துணை தான் உண்மையான துணை என மனிதன் நினைந்து ஏமாந்து போகின்றான். தோன்றாத் துணையாக ஒருவன் இருக்கின்றான். அவன் தான் இம்மைக்கும் மறுமைக்கும் ஒரே துணைவன் என்பதை உணர்ந்தவர்கள் ஆன்றோர்கள். அதனைச் செயலிலும் காட்டினார்கள்.

தம்மை இறைவனிடத்தில் முழுவதாக ஒப்புக்கொடுத்து வாழ்ந்தார்கள். கவலை அற்று வாழ்ந்தார்கள். தானே தனக்குத்துணை என்று அகங்காரம் கொண்டவர்கள் கவலைக் கடலில் மூழ்கினார்கள்.

நாவுக்கரசர் சமணர்களால் துன்புற்றார். துன்பம் பல இழைத்தார்கள். இறையருளால் எல்லாத் துன்பமும் நீங்கின கடைசியாக ஒரு சூழ்ச்சி செய்தார்கள். கல்லுடன் கட்டிக் கடலிலே போட்டார்கள். கல்லே தெப்பமாக மிதந்தது. கல் மிதப்பதற்குக் காரணமாக இருந்தது அஞ்செழுத்து. அல்லிருள் அன்ன அமணர் அதனை அறியார். கல்லே தெப்பமாகிக் கரை சேர்ந்தார் நாவுக்கரசர்.

இருவினையாகிய கயிற்றால் மூன்று மலமாகிய கல்லிற் கட்டுண்டு பிறவியாகிய கரையில் வீழும் மாக்கள் எல்லாம் பேரின்ப வீடாகிய கரையில் ஏறச்செய்தருளும் மெய்மையுடையது அஞ்செழுத்தாகும்.

வருணனும் பண்டைய மாதவத்தால் நாவரசை அலைக்கைகளால் தெளிந்த வழியில் தலைமிசை ஏற்று உய்ந்தான். திருப்பாதிரிப்புலியூர்ப் பக்கத்தில் எழுந்தருள்வித்தான். தொண்டர் கூட்டம் அரகர என ஆர்த்தெழுந்தது. அப்பெருங்கடலும் அம்முழக்கத்தோடு போட்டியிட்டொலித்தது. தொழுத கையும் நீர் ஒழுகும் கண்களும் உடைய நாவுக்கரசு தோன்றாத் துணையாம் இறைவனைப்பரவினார்.

அந்த நேரத்தில் அவருக்கு அவரது வாழ்க்கையே நிழலோடிற்று. தாய் இறந்தாள்; தந்தையும் இறந்தார்; ஒரே ஒரு பற்றுக்கோடாம் உடன் பிறப்புத் திலகவதியையும் விட்டு நீங்கிச் சமணம் சேர்ந்தேன்; அப்போது எல்லாம் தோன்றாத் துணையாக இருந்தவன் இறைவனல்லவா? மூவுலகங்களைப் படைத்தான்; நிலைபெறச் செய்தான்; காத்துவருபவனும் அவனல்லவா? இத்தகைய இறைவன் என்னைத் திருப்பாதிரிப்புலியூர்க் கரையில் கொண்டுவந்து சேர்த்துள்ளானே. இதனை நினைக்கும் போது எனக்குக் கனவுபோல் அல்லவா தோன்றுகிறது.

பதிகத்தின் முதலாம் பாடலைப் பாடி நீங்களும் அவ்வனுபவத்தைப் பெறுவீர்களாக!

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந்தான் மனத்துள் இருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடியோங்களுக்கே!

இறைவன் ஈன்றாளுமாய் உலகம் படைத்துகந்தான். படைத்தபின் உயிர்களின் நன்மையைக் கருதித் தந்தையுமாய் உயிர்களின் நெஞ்சத்தில் இருக்க விரும்பினான். உடன் தோன்றியவரைப் போன்று இமையவர் மீது அன்புடையவனாய் அவர்க்கு நேரும் துன்பங்களை நீக்குபவன் ஆனான். தன் அடியார்கட்குத் தாயும் தந்தையும் உடன் பிறந்தாருமாக நின்று மறைவாகக் காப்பவன்.

'தந்தையாய்த் தாயுமாகித் தரணியாய்த் தரணியுள்ளார்க்
எந்தையுமென்ன நின்ற'

தரணியிலுள்ளவர்கள் எல்லோர்க்கும் எந்தை எனவே எவருக்கும் எந்தையாகிறார். எல்லோரும் வாழ்க என நாம் வாழ்த்தும் போது நமக்கும் அது பயன் படுகிறதல்லவா?

எந்தையார் திருநாமம் நமச்சிவாய எனும்போது நம சிவாயத்தை ஓதுவோர் எல்லார்க்குமே அவர் எந்தை ஆகின்றார்.

ஈன்றாள் உருவிலும் எந்தை உருவிலும் சகோதரியார் உருவிலும் எனக்குத் தோன்றாத் துணையாக இருந்தவன் அம்மூவர்க்குமே தோன்றாத் துணையாகவும் இருந்திருக்கின்றான். மூவரும் எனக்குத் தோன்றுந்துணையாக இருக்க அவருள்ளே தோன்றாத் துணையாக இருந்து அருள்பாலித்த இறைவனின் கருணையை என்னென்று சொல்வேன்!

★ ★ ★ ★ ★ ★


வெளிவந்து விட்டது!

**கூட்டு வழிபாடு**

(புதிய பதிப்பு)

விலை சதம் — 50.

விபரங்களுக்கு:-

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.


இரகசியமாக பிறர் பழிகூறலைப் பாவமென அறிக. அதை நீங்கள் முற்றும் ஒழிக்க வேண்டும். மனதிலே பல எழலாம்; ஆனால் அவற்றை வெளியிட முயல்வீராயின், மெல்ல மெல்ல அது கானியைக் கோடியாக்க முயலும், மன்னித்து மறப்பாயாயின், எல்லாம் முடிவடையும்.

(விவேகானந்தர்)

# உடைந்தகால் உருப்பெற்ற - அதிசயம்!

(எஸ். என். கே. சுந்தரம் - பூதலூர்)
தமிழாக்கம்: திருமதி. சரஸ்வதி

தஞ்சை மாவட்டத்தில் உள்ள பூதலூர் என் சொந்த கிராமமாகும். பகவான் பாபா யான் வசிக்கும் எளிமை யான இருப்பிடத்திற்கு வருகை தந்தருள ஒப்புக்கொண்ட பொழுது, கடந்த 7 மாதங்கட்கு முன் என் மூத்த சகோ தரரின் தொடை எலும்பு முறிந்து மிக மோசமான நிலே யிலிருந்ததை நினைவு கூர்ந்தேன். முறிந்த எலும்புகள் துர திருஷ்ட வசமாக சரியான முறையில் ஒன்றுகூடவில்லை; அவருடைய வாழ்நாளில் பெரும்பான்மையான நேரம் படுக்கையிலே கழிக்கும் நிலேயாகிவிட்டது, அவரது அங்க அசைவுகட்கு ஓர் எல்லேயும், இறுதியும் ஏற்பட்டது என் பதைக் கூறவும் வேண்டுமோ! இந்நிலேயுற்ற என் சகோ தரர் தூக்கிவரப்பட்டு, என் இல்லத்தின் பின்புறக் கூடத் தில் (HALL) நாற்காலியில் வைக்கப்பட்டார், அவர் நாற் காலியில் அமர்ந்திருக்கும் போது, காயமுற்ற கால் அவ ருக்கு உண்டென்றும், சுலபமாக அவரால் நடக்க முடி யாது, என்றும் எவரும் கூறமுடியாது.

பகவான் பாபா எங்கள் சிற்றூருக்கு வருகை தந்தார். நூற்றுக்கணக்கான மக்கள் வீட்டின் பெரிய கூடத்தில் (MAIN HALL) குழுமியிருந்தனர். பாபா சிறிதுநேரம் அங்கு அமர்ந்து பஜனேயில் பக்தர்கள் அன்பும், மரியாதை யுங் கொண்டு செலுத்திய பக்தியை நிவேதனமாக ஏற் றுக் கொண்டார்.

பாபா யாரும் அறியாமல் அவ்வறையை விட்டு வெளி யேறினர். எவரும் அவரது திடீர் மறைவை அறியார். எங்

கே பாபா? என் சகோதரர் இருக்குமிடத்திற்கு நேராகச் சென்ருர். ஆனல் யானே என் சகோதரர் நடக்கமுடியாது மிகமோசமான நிலையிலிருப்பதைப் பற்றிப் பாபாவிடம் எடுத்துரைக்க இதற்கு முன் நேரமோ, தக்கவாய்ப்போ பெறவில்லை. ஆனல் பாபா, பக்தர்களின் பரமதயாநிதி அனைத்தையும் அறிவாரன்ருே! என் சகோதரரை அணுகி, பாபா கேட்ட முதல் கேள்வி இதுதான்:

''என்ன! இதுவரை உன் கால் சரியாகவில்லையா''? ''இல்லை சுவாமி'' என் சகோதரன் அளித்தபதில். உடனே அவரது தெய்வீக வைத்தியம் உருவாயிற்று. விபூதியை கரம் நல்கியது, அக்கலிதீர்க்கும் அருமருந்தை சகோதரர் நெற்றியில் பூசினர்; உள்ளங்கையிலும் சிறிது வைத்தருளினர். பின் பாபா பஜனை நடக்கும் கூடம் நோக்கி திரும்பி வந்தார். அப்போதுதான் யான் பாபா வீட்டினுள் பாகத்தின் கூடத்திற்குச் சென்று வந்ததை அறிந்தேன்.

யான் பாபாவை அணுகியபோது என் முதுகில் மெதுவாக தட்டிக் கொடுத்தார்.

''உன் பிரதருக்கு கால் சரிபண்ணிவிட்டேன்'' என அவர் தமிழில் என்னிடம் கூறினர்.

என்றும் மறவா நன்றியுணர்வில் சிக்கினேன்; என் உள்ளத்தில் பெருமகிழ்வு தாண்டவமாடியது. பேராச்சரியத்தில் திளைத்தேன்; என் தொண்டையிலிருந்து ''எல்லையற்ற கருணையின் உருவமே! கருணநிதியே'' என்ற ஒலிகள் திணறிக்கொண்டே வெளிவந்தன; அன்றிலிருந்து 3 நாட்களுக்குள் என் சகோதரர் கால் எடுத்து வைத்து வீட்டிற்குள் நடமாடினர். ஒருவாரகாலத்திற்குள் தோட்டப் பக்கங்கூட துணிந்து துணையேதுமின்றி சென்ருர். ஒருமாதகாலத்திற்குள்ளாக தினந்தோறும் நல்ல தேக அமைப்புடன், வலிவுடன் இரண்டு மைல்கள்கூட நடக்கும் பழைய நிலையை அடைந்தார். காயத்தின் அறிகுறி எதுவும் தொடையில் அவருக்கு உண்டேல் இல்லை! இல்லை!! இல்லை!!!

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 | நித்திய கரும விதி | .25 |
| 13 | செல்வச்சந்நிதி பாடல் | .15 |
| 14 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 15 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 16 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 17 | திருநீற்றின் பெருமை | .10 |
| 18 | தருமம் | .20 |
| 19 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 20 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 21 | பக்தி | .20 |
| 22 | பௌத்தம் | .20 |
| 23 | பிரமம் | .20 |
| 24 | அவதாரம் | .20 |
| 25 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 1-10 | 2.50 |
| 26 | சுவேதாசுவத உபநிஷத விளக்கம் | .50 |
| 27 | சண்முககவசம் | .50 |
| 28 | சகல கலாவல்லி மாலை | .25 |
| 29 | மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 30 | ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவு தனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

Registered at the G. P. O. as a Newspaper M. L. 59/300.

# சந்தா நேயர்களின் முக்கிய கவனத்திற்கு!

1. 23-வது ஆண்டுச் சந்தா இம்மாதம் தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்பெறும். ஆதலால் சந்தா நேயர்கள் தமது சந்தாவை உடன்அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

2. சந்தா அனுப்புவோரும் விலாச மாற்றம் செய்வோரும் தத்தம் சந்தா இலக்கங்களைக் குறிப்பிட விரும்புகின்றோம். அங்ஙனம் குறிப்பிடுவதனால் காரியாலய வேலை இலகுவாகின்றது என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

3. ஆயுள் சந்தாதாரராகச் சேர விரும்புவோர் நூறு ரூபாய் அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். ஆயுள் சந்தாதாரராகச் சேருவதனால் சோதியின் வளர்ச்சிக்கு உதவி புரிந்தவர்களாவீர்கள்.

4. தங்கள் நண்பர்களில் ஒருவரையாவது சந்தாதாரராகச் சேர்த்து உதவினால் சோதியின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு செய்தவர்கள் ஆவீர்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,
## நாவலப்பிட்டி, (இலங்கை.)

அச்சிடுவிப்போர்:— ஆத்மஜோதி நிலையத்தினர்.
அச்சிடுவோர்:— ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:— 17-11-70.